பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை 14.06.2022 கதிர் 112

## இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை

### வத்தளையில் கொடூரம்

வத்தளையில் இன்று இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை - எலக்கந்த பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வருகை தந்த நபர் ஒருவர் குறித்த இளைஞர் மீது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று ☞ 2

# தமிழ்க் கூட்டமைப்பில் நல்லவர்கள் உள்ளனர்



## நாட்டை மீட்பதற்கான பயணத்தில் அவர்களும் இணைய வேண்டும் என்று சம்பிக்க அழைப்பு

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நல்லவர்கள் உள்ளனர். நாட்டை மீட்பதற்கான பயணத்தில் அவர்களும் இணைய வேண்டும் - என்று 43 ஆம் படையணியின் பொதுச்செயலாளரும் சுயாதீன நாடாளு மன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

**நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத் துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** ☞ 2

## வெள்ளிக்கிழமையில் அரச ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க அமைச்சரவை இணக்கம்

### இந்த வாரம் முதல் நடைமுறை



இந்த வாரத்தில் இருந்து அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளை விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எனினும், நீர் வழங்கல், சுகாதாரம், மின்சார விநியோகம், கல்வி, பாதுகாப்புச் சேவைகள், போக்குவரத்து மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள் இதில் ☞ 2

## 173 கைதிகள் இன்று விடுதலை



பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு 173 சிறைக் கைதிகள் இன்று விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. ☞ 2

## நிரோஷை மீளவும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பணிப்பு



யாழ்., நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்குத் தடைகளை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சட்டமா அதிபரின் ☞ 2

## யாழில் காணாமல்போன குடும்பஸ்தர் பாழடைந்த அறையில் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஊரெழுப் பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி ஊரெழுவில் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில், காணாமல்போயிருந்தவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஊரெழு கிழக்குப் பகுதியிலுள்ள பாழடைந்த அறையில் இருந்தே இவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர் இணுவில் பகுதியைச் சேர்ந்த இரு பெண் பிள்ளைகளின் ☞ 2

## குடும்பப் பெண்ணைக் கடத்தி மிரட்டி பணம் பறிக்க முயன்ற நால்வர் கைது

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா நிருபர்)

குடும்பப் பெண்ணைக் கடத்திச் சென்று கப்பம் பெறுவதற்காகத் தடுத்து வைத்திருந்த நான்கு பேரை வவுனியா - பூவரசங்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடத்தல்காரர்கள் குடும்பப் பெண்ணை வீட்டுக்குள் அடைத்து வைத்துவிட்டு அவரது மகளுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 5 லட்சம் ரூபா பணம் தராவிட்டால் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப் போகிறோம் என மிரட்டியுள்ளனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

நேற்று முறைப்பாட்டாளரிடம் கடத்தல்காரர்களுக்குப் பணம் வழங்குமாறு கூறி சந்தேக



நபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், கடத்தப்பட்ட பெண்ணும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ☞ 2

## இலங்கையில் மருந்துப் பற்றாக்குறை; உலக சுகாதார ஸ்தாபனம் அவதானம்

மருந்துப்பற்றாக்குறைமற்றும்மருந்துஇருப்பு குறித்து கண்டறியும் வகையில் இலங்கை சுகாதார அமைச்சுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவசரகால சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அடுத்து வரும் 3 முதல் 4 மாதங்களில் சுகாதார கட்டமைப்பை சரிவடையாமல் பராமரிப்பதற்கும் 8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

World Health Organization

அத்துடன், இலங்கை குறைந்த பட்ச வாழ்க்கைத் தரத்தை எட்டுவதற்கு 47 தசம் 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன என்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மறைத்து வைக்கப்பட்டிருந்த 100 அரிசி மூடைகள் சிக்கின

நுகர்வோர் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது, சிலாபத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றில் அதிக விலைக்குவிற்பனைசெய்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த இடத்தில் 5 கிலோகிராம் எடையுள்ள சம்பா அரிசியின் 100 மூடைகள் பதுக்கிவைக்கப்பட்டிருந்தன என்று நுகர்வோர் அதிகார



சபை தெரிவித்துள்ளது.

இதையடுத்துச் சந்தேகநபர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## வெள்ளிக்கிழமையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளடங்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக பயணிகளுக்குக் கடுமையான போக்குவரத்துப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதனால், அரச ஊழியர்களுக்கும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரம் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக வாரத்தில் கடமையாற்றும் ஒரு நாளை அரச விடுமுறை தினமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உணவுத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக தமது வீட்டுத்தோட்டங்களில் அல்லது வேறு இடங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கான வசதிகளை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 173 கைதிகள் இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதனடிப்படையில், குருவிட்டை, மஹர, நீர்கொழும்பு, வாரியபொல, போகம்பறை, அநுராதபுரம், களுத்துறை, கொழும்பு - மகசீன், தல்தென, வட்டரெக, பதுளை, மாத்தறை, அங்குணகொலபெலஸ்ஸ, பொலன்னறுவை, கேகாலை, மட்டக்களப்பு, மொனராகலை, பல்லன்சேன, வவுனியா, யாழ்ப்பாணம், காலி, பல்லேகல, திருகோணமலை மற்றும் வீரவில ஆகிய சிறைச்சாலைகளின் கைதிகளே விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தமிழ்க் கூட்டமைப்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதை அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகின்றது. ஜூலை முதல் வாரமளவில் ஆரம்பக்கட்ட இணக்கப்பாடு எட்டப்படும் என எதிர்பார்க்கின்றோம். ஆனால், அதன்மூலம் அனைத்துப் பிரச்சினைகளும் தீராது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நகர்வுகள் தோல்வி அடைந்தால், நாட்டை மீட்பதற்கான மாற்றுத் திட்டத்தை முன்வைக்க நாம் தயார்.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல கட்சிகளில் நல்லவர்கள் உள்ளனர். அவர்களும் நாட்டை மீட்பதற்கான பயணத்தில் இணைய வேண்டும். நபர்கள் முக்கியம் அல்ல. நாடுதான் முக்கியம் - என்றார்.

## நிரோஷை மீளவும்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆலோசனை பெறப்பட்டே வழக்கு மீள முன்னெடுக்கப்பட முடியும் எனக் கடந்த வருட ஆரம்பத்தில் பொலிஸாருக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்த நிலையில் வழக்கு மீளவும் நாளை புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

(விவரமான செய்தி 09 ஆம் பக்கத்தில்)

## குடும்பப் பெண்ணைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நால்வரும் 26 மற்றும் 49 வயதுடைய வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

சந்தேகநபர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழில் காணாமல்போன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தந்தையான தங்கராசா உஷாந்தன் (வயது 36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மரண விசாரணை அதிகாரி, சடலம் மீதான விசாரணைகளை முன்னெடுத்ததுடன் பிரேத பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனைகள் இன்று நடைபெறவுள்ளன. மேலதிக விசாரணைகளைக் கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இளைஞர் ஒருவர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் படுகாயமடைந்த இளைஞர் றாகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்திய உதவிதான் சாத்தியம்

இலங்கைக்கு இப்போது இந்தப் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும் போது விரைந்து உதவ முன்வந்தது இந்தியாதான்.

'வெளியுறவுக் கொள்கையில் அயல் தேசத்திற்கு முன்னுரிமை' என்கின்ற பிரதமர் நரேந்திர மோடி அரசின் உயரிய கொள்கை காரணமாக உரிய சமயத்தில் இந்தியத் தரப்பின் பேருதவிகள் விரைந்து கிடைத்தன.

முன்னெப்போதும் இல்லாத வகையில் குறுகிய காலத்தில், உரிய வடிவத்தில் உதவிகள் விரைந்து கிட்டின. எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய உணவுப் பொருள்கள் என்று எல்லாவற்றையும் வாரி வழங்கியது இந்தியா.

கடந்த சில மாதங்களுக்குள் மூன்று பில்லியன் டொலர் (சுமார் ஒரு லட்சத்து பத்தாயிரம் கோடி ரூபா) பெறுமதியுடைய அத்தியாவசியப் பொருள்களைப் பெரும் கடன் சலுகைகளுடன் வழங்கியிருக்கின்றது பாரதம்.

வேறு வழி இல்லாத இலங்கை அவற்றை குறுகிய காலத்தில் பயன்படுத்தி ஏப்பம் விட்டுவிட்டது. இந்தியாவின் கடனுதவி மூலம் கிட்டிய பொருள்கள் தீர்ந்துவிட்டன. விரைந்து கரைந்து விட்டன.

இதன் பின்னான காலத்தில் ஏற்படப் போகின்ற தட்டுப்பாடுகளை – பற்றாக்குறையை – நிவர்த்தி செய்ய என்ன ஒழுங்கு என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டை நிர்வகிக்கும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் கூட இனிமேல் வரக்கூடிய நெருக்கடியை – தட்டுப்பாடுகளை – பற்றாக்குறைகளை – சமாளிக்கும் திட்டம், தந்திரோபாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

இறைவன் விட்ட வழி என்ற மாதிரி அடுத்த மூன்று வாரங்களும் நிலைமை மிக மிக மோசமாக இருக்கப் போகின்றன என்று அறிவித்துவிட்டு வாளாவிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சரி, அந்த மூன்று வாரங்களின் பின்னராவது நிலைமையைச் சீர் செய்வதற்கான திட்டம் ஏதும் பிரதமரிடம் உள்ளதா என்று கேட்டால் இல்லை என்று தான் பதில் வரும்.

சரி அப்படி என்றால் இனி என்ன செய்வது? சர்வதேச நாணய நிதியத்திடம் அணுகியிருக்கும் கொழும்புக்கு அந்தத் தரப்பிலிருந்து உதவிகள் கிட்டுவதாயினும் அது ஒக்டோபருக்குப் பிறகுதான் சாத்தியம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். பிரதமர் கூட அதனையே கூறுகின்றார்.

அப்படியானால் அடுத்த மூன்றரை மாதங்களுக்கு என்ன செய்வது என்று விடை காண முடியாத ஒரு பெரும் கேள்விதான் நாட்டை வந்து உறுத்தி நிற்கின்றது.

இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து எப்போதும் சிரத்தையாய் இருக்கும் இந்தியாவை திரும்பவும் நாடுவதுதான் நமக்குள்ள ஒரே மார்க்கம்.

இலங்கை விடயம் தொடர்பாக இந்திய தரப்பில் நேர்மையான எண்ணத்துடன் சில நியாயமான எதிர்பார்ப்புகள் உண்டு. அவற்றை நிறைவு செய்தபடி இந்திய உதவிகளைத் திரும்பவும் மூன்று மாதங்களுக்குக் கோருவதே கொழும்பின் முன்னால் உள்ள ஒரே மாற்று வழி.

சென்னை – பலாலி விமான சேவை, காங்கேசன் துறை – காரைக்கால் பயணிகள் படகுப் போக்குவரத்து போன்ற இந்தியாவின் உடனடி எதிர்பார்ப்புகள் சில வற்றையாவது நிறைவு செய்தபடி, இந்தியாவை நாடுவதுதான் நல்லது.

தமிழக மீனவர்களின் இயந்திரப் படகு மீன்பிடித் தடைக்காலம் இன்றுடன் முடிகிறது. நாளை அவர்கள் ஆழ்கடலில் மீண்டும் இறங்குவர். அந்த விடயத்திலும் இலங்கை சகிப்புத் தன்மையுடன் பொறுமையாகச் செயற்பட வேண்டும்.

இந்திய உதவிகளைத் தொடர்ந்து பெறுவதற்குத் தகுதியுடைய அயலவர்களாக இலங்கை தன்னை நிலை நிறுத்திக் கொள்வது இப்போது முக்கியமாகும்.

# இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படும் செயற்பாடுகளில் இந்தியா ஈடுபடுமாயின் அதனை அனுமதிக்கவேமுடியாது!

## சம்பிக்க திட்டவட்டம்



இலங்கை நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் இந்தியா வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் இந்தியா ஈடுபடுமாயின் அவற்றை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

மின்சக்தி துறையை அதானி நிறுவனத்திற்கு வழங்குவது தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதிக்கு அண்மித்த நாள்களில் இலங்கை மின்சாரசபையின் தலைவர் எம்.எம்.சி. பெர்னாண்டோ , அப்போதைய திறைசேறி செயலாளர் சஜித் ஆட்டிகலவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் , அதானி என்ற இந்திய நிறுவனத்துக்கு மன்னார் வலயத்தில் 500 மெகாவோல்ட் காற்றுமின் சக்தியை வழங்கு வதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அதானி நிறுவனத் தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்து விமானத்தின் மூலம் இந்த பிரதேசத்தைக் கண்காணித்தார் எனச் செய்திகள் வெளியாகின.

இதன் போது அவர்களுக்கு 6 ஆயிரம் மெகாவோல்ட் சூரிய மற்றும் காற்று மின்சக்தி தேவைப்படுவதாக அப்போதைய அரசாங்கமும் நிறுவனங்களும் தெரிவித்தன.

ஆனால் இலங்கையில் நாளாந்த மின் தேவை 2 ஆயிரத்து 500 மெகா வோல்ட் மாத்திரமேயாகும்.

அதானி என்பது தனியார் நிறுவனமொன்றாகும். அவ்வாறிருக்கையில் எவ்வாறு இந்த விடயத்தில் இரு அரசாங்கங்கள் தலையிட முடியும் என்பது கேள்விக் குரியதாகும்.

இது தொடர்பில் மின்சாரசபை தலைவர் அவர் அந்தப் பதவியில் இருக்கின்றபோது கோப்குழுவில் தெரிவித்த கருத்தை தற்போது வாபஸ் பெற்றுள்ள போதிலும் , அவர் திறைசேறி செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும், ஜனாதிபதி இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். ஆனால் கடந்த மார்ச் 12 ஆம் திகதி அதானி நிறுவனம், இலங்கை மின்சாரசபை, முதலீட்டுசபை, நிதி அமைச்சு ஆகியவற்றுக்கிடையில் 500 மெகாவோல்ட் மின் குறித்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

அதானி நிறுவனம் அரசாங்கத்தின் பிரதிநிதி என்பதற்கு உத்தியோகபூர்வ சான்றுகள் உள்ளனவா? மின்சாரசபை தலைவரின் கருத்தை ஜனாதிபதி மறுத்துள்ளார்.

அவ்வாறெனில் பிரதமரா இந்த ஆலோசனையை வழங்கியது? மின்சார சபை சட்டத்தின் பிரகாரம் பிரதமருக்கு இவ்வாறு பணிப்புரை விடுக்கும் அதிகாரம் கிடையாது. அமைச்சரவை அனுமதி உள்ளது என்று கூறப்படுவது இதற்குப் பதில் அல்ல. காரணம், சட்டத்துக்கு முரணாக அமைச்சரவை செயற்பட முடியாது.

எனவே மன்னார் வலயத்தின் மின்சக்தி துறையை முழுமையாக அதானி தனியார் நிறுவனத்துக்கு வழங்கி நாட்டின் இறையாண்மை காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதாகவே நாம் கருதுகின்றோம்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மின்சாரசபை சட்டத்தின் மூலம், அதானி நிறுவனத்துக்கு இதனை வழங்குவதில் அரச தரப்பில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படுமாயின் ஏனைய தரப்பினர் ஊடாக வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய நிலைமையாகும்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள நிலைமைக்கு மத்தியில் இந்தியா வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை, இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுமாயின் அவற்றை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

மின்சக்தி துறையை அதானி நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். – என்றார்.

# கதிர்காமம் பாதயாத்திரைக் குழு மாமூலையை நோக்கிப் புறப்பாடு



(காரைதீவு நிருபர் சகா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த யாழ்.கதிர்காமம் பாத யாத்திரை குழுவினர் கடந்த மூன்று தினங்கள் வற்றாப்பளையில் தங்கியிருந்தனர்.

கடந்த 04 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்த இப் பாதயாத்திரை 10 ஆவது நாளாக நாளை புதன்கிழமை மாமூலையை நோக்கிப் பயணிக்கவுள்ளனர்.

கடந்த மூன்று நாள்களாக வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில், வைகாசிதிருக்குளிர்த்தி சடங்கு வரை தங்கியிருந்தனர்.

இன்று 14ஆம் திகதி மீண்டும் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டு ஊற்றங்கரையில் தங்கியிருந்தனர் என பாதயாத்திரை பொறுப்பாளர்களான எஸ்.ஜெயராஜ, எஸ்.நந்தபாலா ஆகியோர் முல்லைத்தீவு வற்றாப் பளை அம்மன் ஆலயத்தில் இருந்து தெரிவித்தனர்.

என்னதான் பொருளாதார நெருக்கடி இருந்தாலும் வழிநெடுகிலும் முருகன் அருளால் ஆலயங்களும் மக்களும் தாராளமாக உணவளித்து உதவி செய்தனர். எவ்வித விக்கினமும் இல்லாமல் பக்திபூர்வமாக பாதயாத்திரையில் வருகிறோம். – என இவர்கள் மேலும் தெரிவித்தனர்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உலக வர்த்தக அமைப்பின் மீனவர் மானியத்தை நிறுத்தும் ஒப்பந்தத்துக்கு இந்தியா எதிர்ப்பு



இந்திய மீனவர்களுக்கு அரசு வழங்கும் மானியத்தை உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தின்படி நிறுத்துவது அவர்களது வாழ்வாதாரம், குடும்பங்களை பாதிக்கும் என்று ஒன்றிய வர்த்தக அமைச்சர் பியூஷ்கோயல்தெரிவித்தார்.ஒன்றிய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் 2016ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 9 லட்சம் குடும்பங்களை சேர்ந்த 30.77 லட்சம் மீனவர்களின் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளன. இந்நிலையில், ஜெனிவாவில் நடக்கும் உலக வர்த்தக அமைப்பு மாநாட்டில் உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தின்படி, இந்திய மீனவர்களுக்கு அரசு வழங்கும் மானியத்தை நிறுத்த பரிந்துரைக்கப்பட்டது.இம்மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள ஒன்றிய வர்த்தகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல், "உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தின்படி, இந்திய மீனவர்களுக்கு அரசு வழங்கும் மானியத்தை நிறுத்துவது அவர்களது வாழ்வாதாரத்தை பாதிக்கும், குடும்பங்களை வறுமையில் தள்ளும். எனவே, வளர்ந்த நாடுகளின் அழுத்தத்திற்கு கட்டுப்பட்டு எந்த ஒப்பந்தத்திலும் இந்தியா கையெழுத்திடாது," என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.இதனிடையே இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு, கேரளா, கோவா, கர்நாடகா, ஆந்திரா, குஜராத், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் உள் ளிட்ட மாநிலங்களை சேர்ந்த 34 மீனவர்கள் ஜெனிவாவில் உள்ள உலக வர்த்தக மாநாட்டின் அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்திய மீனவர்களின் மக்கள் தொகை 112 நாடுகளின் மக்கள் தொகையை விட அதிகமாகும்.

## ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதில் ஜேர்மனியை பின்னுக்கு தள்ளியது சீனா



எரிபொருள் மற்றும் சுத்தமான காற்றுக்கான ஆராய்ச்சி மையம் அண்மையில் நடைபெற்றது. அவ் ஆய்வில் கூறப்பட்டுள்ளதாவது:

உக்ரைன் மீது போரை தொடங்கிய 100 நாள்களில் மட்டும் ரஷ்யா எண்ணெய், இயற்கை எரிவாயு, நிலக்கரி என ரூ7.56 லட்சம் கோடிக்கு விற்று தீர்த்துள்ளது. இதில் படிம எரிபொருள் மட்டும் ரூ4.60 லட்சம் கோடிக்கு இந்த 100 நாள்களில் விற்கப்பட்டுள் ளது. இது மொத்த விற்பனையில் 61 சதவீதமாகும்.இதில் ரூ98,435 கோடி ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, போலந்து உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் ஈட்டப்பட்ட வருவாயாகும். போர் தொடங்கிய 2 மாதங்களுக்கு ரஷ்யாவிடம் இருந்து அதிகளவில் படிம எரிபொருள் இறக்குமதி செய்த நாடாக முதல் இடத்தில் இருந்தது. சீனா ரூ1.02 லட்சம் கோடிக்கு கொள்முதல் செய்து 2வது இடத்தில் இருந்தது.இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய், இயற்கை எரிவாயு, படிம எரிபொருள் கொள்முதலில், ஜேர்மனியை பின்னுக்கு தள்ளி சீனா தற்போது முதலிடத்தை பிடித்துள்ளது. இவ்வாறு ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## திபெத்தில் கோளரங்கம் கட்டும் சீனா

*உலகின் கூரை என்றழைக்கப்படும் திபெத்தில் மிக உயரமான இடத்தில் சீனா கோளரங்கம் கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது. இதற்கான கட்டுமான பணிகளை தொடங்கியுள்ளதாக அதிகாரப்பூர்வ ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த கோளரங்கம் வரும் 2024ம் ஆண்டு முடிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிரபஞ்சத்தை ஆராய்வதை நோக்கமாக கொண்டே சீனா இந்த கோளரங்கத்தை திறப்பதாக கூறப்படுகின்றது. கோளரங்கம் ஒரு மீற்றர் விட்டம் கொண்ட லென்ஸ் உடன் மிகப்பெரிய கண்ணாடி வானியல் தொலைநோக்கியை கொண்டிருக்கும். இது, வானியல் ஆராய்ச்சி மற்றும் பொதுஅறிவியல் கல்விக்கான முக்கிய தளமாக திகழும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.*



## நெடுங்காலம் ராணியாக இருந்து இரண்டாம் எலிசபெத் சாதனை

இரண்டாம் எலிசபெத் ஆட்சி பொறுப்பேற்று 70 ஆண்டுகள் நிறைவடைந்து உள்ளன. இதையொட்டி, 2022ம் ஆண்டை பிளாட்டினம் ஜுபிலியாக, ராயல் அரண்மனை கொண்டாடி வருகிறது. பிரிட்டனின் ராணியாக உள்ள இரண்டாம் எலிசபெத், அரச பணியை ஏற்று, 70 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இதன்மூலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை 70 ஆண்டுகள் ஆட்சி செய்த ஒரே மகாராணி என்ற பெருமையை இரண்டாம் எலிசபெத் பெற்றுள்ளார். தாய்லாந்து அரசர் பூமிபோல் அதுல்யதேஜ், 1927-2016 வரை, 70 ஆண்டுகள், 126 நாள்கள் அரசராக இருந்தார். அந்த சாதனையை தற்போது இரண்டாம் எலிசபெத் ராணி அவர்கள் நேற்று முறியடித்து, உலகில் நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னர் அல்லது மகாராணி என்ற சாதனை படைத்த இரண்டாவது நபர் ஆனார். எலிசபெத் அலெக்சாண்டிரா மேரி என்ற இயற்பெயர் கொண்ட ராணி இரண்டாம் எலிசபெத், தனது தந்தை ஜார்ஜ் இறந்த பிறகு, 1952ம் ஆண்டுபெப்ரவரி 6ம் திகதி, பிரிட்டனின் மகாராணியாக முடிசூடிக் கொண்டார். அப்போது அவருக்கு 25 வயது. 1952ல் நிகழ்ந்த இவரது முடிசூட்டு விழா, உலகளவில் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பட்ட முதல் பிரம்மாண்ட நிகழ்வு ஆகும். பிரிட்டன் வரலாற்றில் விக்டோரியா மகாராணி 63 ஆண்டுகாலம் ஆட்சி புரிந்த நிலையில், அதை முறியடித்து 70 ஆண்டுகள் அரியணையை அலங்கரித்து இரண்டாம் எலிசபெத் வரலாற்று சாதனை புரிந்துள்ளார். இவர் பிரிட்டன் ராணி என்று அழைக்கப்பட்டாலும், 16 நாடுகளின் அரசியல் சாசன சட்டப்படி இவர் அரசியாக உள்ளார். மேலும் 54 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட காமன்வெல்த் எனப்படும், பிரிட்டிஷாரால் ஆளப்பட்ட நாடுகளின் கூட்டமைப்பிலும் பொறுப்பு வகிக்கி றார். இவை தவிர பிரிட்டன் திருச் சபையின் மிக உயரிய கவர்னராகவும் உள்ளார்.

பிரிட்டன் பிரதமர்களை தேர்வு செய்வதில் ராணியின் பங்கு மிக முக்கியமானதாகும். இவர் இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் உள்பட 14 பிரிட்டன் பிரதமர்களின் காலகட்டங்களில் அரசியாக பொறுப்பு வகித்துள்ளார். பிரான்ஸ் தேசத்து மன்னர் பதினான்காம் லூயிஸ், 1643-1715 வரை, 72 ஆண்டுகள், 110 நாள்கள் அரசராக இருந்து, இந்த சாதனை பட்டியலில் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடா பிரதமருக்கு கொரோனா தொற்று

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கொரோனா பாதிப்பு உறுதியாகியுள்ளது. கொரோனா தடுப்பூசி போடவில்லை எனில் உடனே தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு ஜஸ்டின் ட்ரூடோ அறிவுறுத்தியுள்ளார்.



# இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் சரத் பவாரை பொது வேட்பாளராக்க எதிர்க்கட்சிகள் ஆலோசனை



பழுத்த அரசியல்வாதியான சரத் பவாரை இந்திய குடியரசுத் தலைவர் பதவிக்கு பொது வேட்பாளராக களத்தில் இறக்கலாம் என பல எதிர்க்கட்சிகள் ஆலோசனை நடத்தி வருகின்றன. சிவசேனா, காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சி மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் முன்னாள் மத்திய அமைச்சர் மற்றும் மகாராஷ்டிர முன்னாள் முதல்வரான சரத் பவார் குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதியாக போட்டியிட வேண்டும் என விரும்புகின்றன.

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரான சரத்பவார், பல மூத்த அரசியல்வாதிகளுக்கு நன்கு பரிச்சயமானவர். இவரது மகள் சுப்ரியா சுலே நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார் என்பதும் இவரது சகோதரர் அஜித் பவார் மகாராஷ்டிர மாநிலத்தின் துணை முதல்வராக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சிகள் ஒருங்கிணையாவிட்டால், தேசிய ஜனநாயக முன்னணி சுலபமாக குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெறும் என்கிறசூழல்நிலவுவதால்பொதுவேட்பாளராக சரத் பவார் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்றமை சரியாக இருக்கும் என பல எதிர்க்கட்சிகள் கருதுகின்றன. தேசியவாத காங்கிரஸ் கட்சி மகாராஷ்டிர மாநிலத்தில் சிவசேனா மற்றும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்து ஆட்சி நடத்தி வருகிறது.

பாரதிய ஜனதா கட்சியை மகாராஷ்டிர மாநிலத்தில் ஆட்சியை கைப்பற்ற விடாமல் தடுத்து, சிவசேனா கட்சியை கூட்டணியிலிருந்து பிரித்து, மகா விகாஸ் அகாடி என்கிற புதிய கூட்டணியை ஆட்சியில் அமர்த்தியதில் முக்கிய பங்களிப்பு சரத் பவாருடையது எனக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் டெல்லி மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் ஆட்சி செய்து வரும் ஆம் ஆத்மி கட்சியின் தலைவரான அரவிந்த் கெஜ்ரிவால் தொலைபேசி மூலம் சரத் பவாரை தொடர்புகொண்டு உரையாடியுள்ளார். அத்துடன் ஆம் ஆத்மி கட்சியின் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சய் சிங் மும்பை சென்று சரத் பவாரை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினார் எனவும் ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே சிவ சேனா கட்சி சரத் பவாருக்கு ஆதரவாக உள்ள நிலையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி ஆகியோருடனும் சரத் பவார் தொடர்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் மற்றும் உத்தரப் பிரதேச முதல்வர் முன்னாள் அகிலேஷ் யாதவ் ஆகியோருடனும் பவார் நல்லுறவு பேணி வருகிறார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியுடன் பவார் கருத்தொற்றுமை கொண்டவராக இருந்தார். தி.மு.க. மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகள், மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது கூட்டணியில் ஒரே நேரத்தில் அங்கமாகவும் இருந்தன. இடதுசாரிக்கட்சிகளுடனும் சரத்பவாருக்கு சுமூகமான உறவு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

முக்கிய எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் சரத் பவார் மீது பிரதமர் நரேந்திர மோடிக்கு மிக்க மரியாதை உள்ளது என்பது அரசியல் வட்டாரங்களின் கருத்தாகும். சமீபத்தில் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டமை டெல்லி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பான செய்தியாகியிருந்தது. குடியரசுத் தலைவர் தேர்தலில் பா.ஜ.கவுக்கு முழுப் பெரும்பான்மை இல்லாத நிலையில், சரத் பவாரை வேட்பாளராக நிறுத்துவது குடியரசுத் தலைவர் தேர்தலில் மட்டுமல்லாது 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிர்க்கட்சிகள் ஒருங்கிணையவும் உதவும் என அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.



## ஜஸ்டின் பீபர் உடல்நலத்துடன் இந்திய அரசியலை கிண்டல் செய்தவருக்கு நெட்டிசன்கள் எதிர்ப்பு

கனடாவைச் சேர்ந்த 28 வயதான புகழ்பெற்ற பொப் பாடகரான ஜஸ்டின் பீபர், கடந்த சில தினங்களுக்கு முன்னதாக தனது சமூகவலைத்தளப் பக்கத்தில், தனக்கு ராம்சாய் ஹண்ட் சின்ட்ரோம் என்ற ஒருவகை குறைபாடு உறுதிசெய்யப்பட்டிருப்பதாகவும், அதனால் முகப்பக்கவாதம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறியிருந்தார். இதனால், அவரது முகத்தின் ஒரு பக்கத்தை அசைக்க முடியவில்லை என்றும் அவர் கூறியிருந்தார். இது இசை ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்த நிலையில் அவரின் நோயை இந்திய அரசியலுடன்ஒப்பிட்டு, ஸ்டாண்ட்-அப் கொமெடியன் ஒருவர் பேசியது சர்ச்சையை கிளப்பியுள்ளது. பிரபல மேடை நகைச்சுவையாளரும், ராப்பருமான முனாவர் பரூக்கி, தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் ஜஸ்டின் பீபரின் நோயைக் குறிப்பிட்டு, அன்புள்ள ஜஸ்டின் பீபர், என்னால் முழுமையாக புரிந்து கொள்ள முடிகிறது. இங்கே இந்தியாவில் கூட வலது பக்கம் சரியாக வேலை செய்யவில்லை, என்று பதிவிட்டார். இதையடுத்து ஜஸ்டின் பீபரின் உடல் குறைபாட்டை கேலி செய்வதாகக் கூறி, முனாவர் பரூக்கியை சமூகவலைத்தளப் பக்கங்களில் நெட்டிசன்கள் கோபமாக திட்டித் தீர்த்துள்ளனர். ஒருவரின் மிகவும் கஷ்டமான சூழ்நிலையை, நகைச்சுவைக்காகப் பயன்படுத்தியது தவறு என்றும் நெட்டிசன்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒருவரின் நோயைப் பற்றி கேலி செய்துள்ளதைப் பார்க்கும்போது, நீங்கள் எவ்வளவு கேவலமாக ஆக இருக்கிறீர்கள் என்பதை அது காட்டுகிறது என்றும், இதில் என்ன வேடிக்கை இருக்கிறது? யாரோ ஒருவரின் நோயைப் பற்றி கேலி செய்வது வேடிக்கையானது என்று நினைக்கிறீர்களா? என்றும் அவர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

முனாவர் பரூக்கியின் நகைச்சுவை அவரை சிக்கலில் மாட்ட வைத்துள்ளமை இது முதல் முறையல்ல. ஏற்கனவே கடந்த ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இந்துக் கடவுள்களையும் தெய்வங்களையும் அவமதித்ததாக, குற்றஞ்சாட்டப்பட்டு ஒரு மாதம் அவர் சிறையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திரையில் இருந்தாலும் தலைவர் தலைவர்தான்! இரத்ததான குழு ஆரம்ப விழாவில் கமல் உரை



சர்வதேச இரத்த தான தினத்தை முன்னிட்டு இரத்தம் தேவைப்படுபவர்களுக்கு உதவி செய்யும் வகையில் மக்கள் நீதி மய்யம் சார்பில் கமல் இரத்ததான குழு ஆரம்ப விழா ஆழ்வார் பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. அக்கட்சியின் தலைவர் கமல் ஹாசன் இரத்ததானக் குழுவைத் துவக்கி வைத்தார்.

பின்னர் மேடையில் உரையாற்றிய கமல்ஹாசன், சிறையில்இருந்தால்தான் தலைவர் என்பது இல்லை. திரையில் இருந்தாலும் தலைவர்தான். விக்ரம் படத்தின் வெற்றி எனக்கு இன்னொரு படிக்கட்டு. நான் ஏற வேண்டிய மலை பெரிய மலை. படிப்படியாக ஏறி வருகிறேன். என் வைராக்கியமும் வீரமும் இன்னும் குறையவில்லை, என்று தெரிவித்தார்.

மக்களாட்சியில் கேள்வி கேட்கத்தான் செய்வார்கள். அரசியல் என்பது வாக்கு எண்ணிக்கை மட்டும் அல்ல. ஏழையை பணக்காரராக மாற்றுவது மட்டும் அல்ல அரசியல். ஏழைகளே இல்லாமல் மாற்றுவதுதான் அரசியல். எனக்குவள்ளல் பட்டம் தேவையில்லை. மனிதன் என்ற பெயரே போதும்.

நான் என் சினிமாவை விட்டுக் கொடுக்கவில்லை. சினிமா என் தொழில். நான் அரசியலுக்கு சம்பாதிக்க வரவில்லை.

கமல் அரசியலுக்கு வந்து ஒப்பந்தத்தில் பணம் அடிக்கவில்லை என்று புரிந்து கொள்ள முடியும். என் அரசியல் பேச்சு காரணமாக இருக்கும். அதன் மூலம் மட்டுமே என்னை மிரட்ட முடியும்.

அதையும் செய்திருக்கிறார்கள். உண்மையைப் பேசினால் அவர்களுக்குக் கோபம்தான் வரும். அரசியல் வியாபாரம் இல்லை. ஆனால், அதைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிகளில் கழிப்பறை செல்ல வேண்டுமென்றால் போக முடியாத நிலை இருக்கிறது. கழிப்பறைக்குச் செல்ல முடியாத இடத்திற்கு ஏன் படிக்க அனுப்பி வைக்க வேண்டும்? வீட்டில் நல்லபடியாக இருக்கட்டும். நாம் போய் சொல்லி கொடுப்போம். இதுதான் எங்கள் அரசியல்.

காலை வாரி விடுவது அல்ல எங்கள் அரசியல். தடால் தடால் என்று பேசுவதை சினிமாவில் பேசிக் கொள்கிறேன். என்னைவிட சிறப்பாக அரசியலை அவர்களால் செய்யமுடியாது. என்னிடம் தொழில்நுட்பம் இருக்கிறது. அவர்களிடம் மேடைதான் இருக்கிறது.

எனக்குப் பிடித்த இரண்டு தலைவர்களுக்கு சினிமா பிடிக்காது. ஆனால், நான் ஏன் சினிமாவை விட்டுக்கொடுக்கவில்லை? தொலைக்காட்சியில், சின்னத்திரைக்கு ஏன் செல்கிறீர்கள் என்று கேட்டார்கள். குடிசைக்குள் சென்றால்தான் கோபுரத்தில் வாழ முடியும். தொலைக்காட்சிக்கு சென்றது எனக்கு அடுத்த பலமாகத்தான் தெரிகிறது. என் தொழில் தொடரும்.

சினிமாவுக்கு நடிக்க ஏன் செல்கிறீர்கள்? என்று கேட்காதீர்கள். நான் செலவு செய்யப் போகும் பணமும், என்கட்சிக்குக்கொடுக்கும்தொகையும் வருமான வரித்துறைக்குத் தெரியும். பயந்து ஒடுங்க வேண்டிய அவசியம் இல்லை. அரசியல் என்பது கடினமான வேலை. நற்பணிதான் எங்கள் அரசியல், என்றும் தனது உரையில் கமல் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு









# மட்டு. தாண்டவன்வெளி குளக்கட்டு கண்ணகையம்மன் ஆலய தீ மிதிப்பு

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பில் புகழ்பெற்ற தாண்டவன்வெளி குளக்கட்டு கண்ணகையம்மன் ஆலய அலங்கார திருச் சடங்கு உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இன்று திருக்குளிர்த்தி பாடி அம்மன் உற்சவம் நிறைவுபெற்றது.

தாண்டவன்வெளி, ஏரன்ஸ் வீதி, வாழ் மக்களால் பத்தாம் நாள் சடங்கு உற்சவத்தைச் சிறப்பிக்கும் முகமாக குருந்தையடி பிள்ளையார் ஆலயத்திலிருந்து தீக்குழிக்கான தீக்கட்டை மற்றும் மடப்பெட்டிகள் உள்ளிட்ட பூசைப் பொருள்கள் வைபவ ரீதியாக நேற்று முன்தினம் இரவு மேள தாள வாத்தியங்கள் முழங்க, காவடிகள் ஆடிவர கண்ணகியம்மன் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டன.

தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் தீக்குழிக்கான தீ மூட்டும் வைபவம் இடம்பெற்றது.

பத்தாம் நாள் திருச்சடங்கைச் சிறப்பிக்ககும் முகமாக நேற்று அதிகாலை ஆலய பிரதம பூசகர் சித்திர வேல் ஐயா தலைமையில் தீமிதிப்புக்கான கிரியைகள் இடம் பெற்று, தீமிதிப்பு வைபவம் மிக சிறப்புடன் நடந்தேறியது.

இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் அம்பாளின் திருக்குளிர்த்தி பாடி உற்சவம் இனிதே நிறைவுபெற்றது.

## மட்டு. கல்லடி விபத்தில் இருவருக்குப் படுகாயம்

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற பெரும் வீதி விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு 8 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற காரொன்று கல்லடி சாந்தி படமாளிகைக்கு முன்னால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பாதை மாறி கல்முனை திசையிலிருந்து மட்டக்களப்பு பக்கமாக எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது எனக் கூறப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும், காரில் பயணித்த மற்றொருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கார் நாடாளுமன்றத்தில் கடமை புரியும் ஒருவருடையதெனத் தெரியவருவதுடன் காரினுள் மதுசாரப் போத்தல்களும் காணப்பட்டன எனவும் கூறப்பட்டது. காத்தான்குடி பொலிஸாரால் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அதிபருக்கு அழைப்பாணை

திருகோணமலைஷண்முகா இந்துக் கல்லூரியில் ஹபாயா அணிந்து சென்றமைக்காக வெளியேற்றப்பட்ட ஆசிரியை பஹ்மிதா ரமீஸ், கல்லூரியின் அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் அதிபருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.


கல்வி அமைச்சின் எழுத்து மூலக் கட்டளைக்கிணங்க, கடந்த பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கல்லூரிக்குக் கடமையேற்க சென்றிருந்த பஹ்மிதா றமீஸை கடமையேற்க விடவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அதுதொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு ஓகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருகின்றது. அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அதிபருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

## சிராஜ்நகர் வாசியை காணவில்லை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – சிராஜ் நகர் பகுதியில் வசித்து வந்த அப்துல் வஹாப் ராஹிமீன் என்பவர் கடந்த ஏப்ரல் மாதம் முதல் காணாமல் போயுள்ளளார் என அவரது உறவினர்கள் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.



கிண்ணியாவிற்குச் சென்று வருகிறேன் எனக் கூறிவிட்டு சென்றவர் இன்றுவரை வீட்டுக்குத் திரும்பி வரவில்லை எனவும் இவர் தொடர்பிலான தகவல் தெரிந்தால் தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கோ, 0718591192 அல்லது 076 023 3478 எனும் இலக்கத்திற்கோ அறிவிக்குமாறு பொதுமக்களிடம் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## பட்டிருப்புப் பாலம் அருகில் இளைஞரின் சடலம் மீட்பு

பட்டிருப்பு பாலத்திற்கு அருகில் உள்ள நீரேந்து பிரதேசத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிகுடி கிராமத்தில் உள்ள வீட்டிலிருந்து தனது மாட்டிற்கு புல்வெட்டுவதற்கு பட்டிருப்பு பாலத்தினூடாக துவிச்சக்கர வண்டியில் பயணித்த – களுவாஞ்சிகுடி 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த – பேரின்பராசா பிரதீபன்(வயது–29) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் பயணித்த சைக்கிளும் அருகிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிகுடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நாவற்குடா மேல்மாடி வீதி தார் வீதியாக அபிவிருத்தி





எழுச்சி மிகு மாநகரம் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட நாவற்குடா மேல்மாடி வீதியினை தார் வீதியாக அபிவிருத்தி செய்யும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு நிதியின் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையின் 15 ஆம் வட்டார உறுப்பினர் ம.நிஷ்கானந்தராஜாவின் பாதீட்டு முன்மொழிவுக்கு அமைய15 லட்சம் ரூபா செலவில் இந்த வீதியானது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

சுமார் 150 மீற்றர் நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி வீதியின் அபிவிருத்திப் பணிகளை மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்களான ம.நிஷ்கானந்தராஜா, த.இராஜேந்திரன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

மாநகர சபையின் நிதி மூலமான வேலைகளை நேரடியாக மாநகர சபையானது அதன் ஆளணி வளங்களை பயன்படுத்தி மேற்கொண்டு வருவதன் ஊடாக உத்தேச மதிப்பீட்டினை விட மேலதிகமாக 40 வீதத்துக்கும் அதிகமான வேலைகளை செய்யக் கூடியதாக இருப்பதோடு அதன் மூலம் மேலும் ஒரு வீதியையும் அபிவிருத்தி செய்து பொதுமக்களுக்கு கையளித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




# கொழும்பு - யாழ் இந்துக்கல்லூரிகளின் பழைய மாணவர்களின் கிரிக்கெட் போட்டி

நேற்றுமுன்தினம் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களுக்கிடையில் யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ 20 பந்துப்பரிமாற்றங்களைக்கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் காலை நடந்த போட்டியில் கொழும்பு இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் அணியும் மாலை நடந்த போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணியும் வெற்றி பெற்றிருந்தன.

காலையில் யாழ் இந்துக்கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன் தொடக்க உரையுடன் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

பழையமாணவர் சங்கத்தலைவர் தவரூபன் மற்றும் அதிபர் ஆகியோர் வீரர்களுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்தியிருந்தனர். நாணயச்சுழற்சியில் யாழ் இந்துக்கல்லூரி அணி வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடி இருந்தது.

மாலையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தலைவர் தவரூபன் தலைமையில் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றிருந்தது. நிகழ்வில் பிரதி அதிபர் பரமேஸ்வரன் மற்றும் சொல்லருவி சிவகுமாரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்து பரிசில்களை வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் கொழும்பு இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணியினால் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணிக்கு நினைவுப்பரிசில்களும் வழங்கப்பட்டன. இறுதி நிகழ்வில் யாழ் இந்துக்கல்லூரி பிரதி அதிபர் பரமேஸ்வரன், கொழும்பு இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்க உபதலைவர் ரஜீவ் ஆகியோரும் உரையாற்றினர் .

### போட்டி முடிவுகள்

**காலை**

பழையமாணவர் அணி - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 168/8
பழையமாணவர் அணி - கொழும்பு இந்துக்கல்லூரி 169/3

**மாலை**

பழையமாணவர் அணி - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 190/9
பழையமாணவர் அணி - கொழும்பு இந்துக்கல்லூரி 154/10



## கரப்பந்தாட்டத்தில் விபுலானந்தா முதலிடம்

(காரைதீவு சகா)

கல்முனை வலய மட்டத்திற்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பெருவிளையாட்டுகளில் ஒன்றான கரப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## ஒரு கிலோ எடையைக் குறைத்தால் 1,000 கோடி ரூபா பா.ஜ.க. எம்.பிக்கு மத்திய அமைச்சர் நிதின் கட்கரி சவால்!

உடல் எடையை ஒரு கிலோ குறைத்தால் ஆயிரம் கோடி ரூபாவை தொகுதி வளர்ச்சி நிதியாக வழங்குவதாக பா.ஜ.க. எம்.பியிடம் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். மத்தியப் பிரதேச மாநிலத்தில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், உஜ்ஜியினி மக்களவைத் தொகுதி உறுப்பினரான அனில் பிரோஜியா, தனது தொகுதி வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும், என்று கோரிக்கை விடுத்துக்கொண்டே இருந்ததாகக் கூறினார்.

அப்போது அவருக்கு ஒரு நிபந்தனை விதித்தேன் எனக் கூறிய நிதின் கட்கரி, அதிக உடல் பருமன் கொண்ட அவர், தனது ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு உடல் எடையைக் குறைத்துக் கொண்டால் ஒவ்வொரு கிலோ எடை குறைப்புக்கும் ஆயிரம் கோடி ரூபா நிதி வழங்கப்படும் என நகைச்சுவையாகக் கூறினார் தெரிவித்தார். தனது நிபந்தனையை ஏற்ற அவர் தீவிர உடல் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார் எனவும் நிதின் கட்கரி கூறியுள்ளார்.

## நஷனல் ஹெரால்ட் பண மோசடி வழக்கு ராகுல் காந்தியிடம் 10 மணி நேர விசாரணை

நஷனல் ஹெரால்ட் பண மோசடி வழக்கில் ஆஜரான காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியிடம் அமுலாக்கத்துறை அதிகாரிகள் 10 மணிநேரத்துக்கும் மேலாக விசாரணை மேற்கொண்டனர். முன்னதாக, ராகுல் காந்தியுடன் நூற்றுக் கணக்கான காங்கிரஸார் பேரணியாக வந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் காந்தியும், சோனியா காந்தியும் இயக்குநர்களாக உள்ள யங் இந்தியா நிறுவனம், அசோசியேட்ஸ் ஜேர்னல்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான நஷனல் ஹெரால்ட் பத்திரிகையை கடந்த 2010 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கியது.



இந்த விவகாரத்தில் பெரிய அளவில் பண மோசடி நடைபெற்றுள்ளதாக பா.ஜ.கவின் சுப்பிரமணியன் சுவாமி வழக்குத் தொடர்ந்தார். இந்த பண மோசடி வழக்கில் அமுலாக்கத்துறை வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

அதன் அடிப்படையில், டெல்லியில் உள்ளஅமுலாக்கத்துறைஅலுவலகத்துக்கு தனது கட்சியினருடன் ராகுல் காந்தி நேற்று ஊர்வலமாக வந்தார். இதனால் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி, ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பகேல், முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் உள்ளிட்டோரும் ராகுல் காந்தியுடன் வந்தனர். காலை 11.10 க்கு அமுலாக்கத்துறை அலுவலகத்துக்கு நுழைந்த ராகுல் காந்தியிடம் அமுலாக்கத் துறை அதிகாரிகள் பல மணிநேரம் விசாரணை நடத்தினர். 10 மணிநேரத்துக்கும் மேலாக நடைபெற்ற விசாரணையை அடுத்து, இரவு 11.30 க்கே ராகுல் காந்தி அமுலாக்கத்துறைஅலுவலகத்தில் இருந்து வெளியே வந்தார். நஷனல் ஹெரால்ட் பண மோசடி வழக்கில் ராகுல் காந்தி அமுலாக்கத்துறை அலுவ லகத்தில் ஆஜராகியிருக்கின்றமை இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ராகுல் காந்தியை பழிவாங்கும் நோக்கில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறி அமுலாக்கத்துறை அலுவலகத்துக்கு முன்பு காங்கிரஸார் போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். அவர்களை பொலிஸார் அங்கிருந்து அப்புறப்படுத்தினர். ப. சிதம்பரம், அதிர் ரஞ்சன் சவுத்ரி, கே.சி. வேணுகோபால் உள்ளிட்ட மூத்த தலைவர்களை பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த நடவடிக்கையின்போது பொலிஸார் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டதால் ப.சிதம்பரம் உள்ளிட்டோருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாக காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

# உலகக் குருதிக்கொடையாளர் தினம் தேசங்கள் கடந்து இன்று அனுஷ்டிப்பு




- திரு.த.றவினதாஸ் -
(பொதுச் சுகாதார பரிசோதகர்,
தேசிய குருதிமாற்று பிரயோக சேவை
பிராந்திய இரத்த நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை)



இரத்த தானம் செய்வது ஒற்றுமையின் செயல், இந்த உன்னதமான முயற்சியில் இணைந்து உயிர்களைக் காப்பாற்றுங்கள் எனும் தொனிப்பொருளில் இவ்வாண்டு உலக் குருதிக்கொடையாளர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு நாட்டில் உலக குருதிக்கொடையாளர் தினம் சர்வதேச ரீதியாக நிகழ்வுகள் நடை பெறுவது வழமையாகும். இம்முறை மெக்சிக்கோ நாட்டில் இத்தினம் சிறப் பான முறையில் கொண்டாடப்படுகின்றது.

உயிர்களைக் காப்பாற்ற பாதுகாப்பான குருதி மற்றும் குருதிக் கூறுகளின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ஜூன் 14 அன்று குருதிக்கொடையாளர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது.

இத்தினம் தன்னார்வமான முறையில் முன்வந்து எவ்வித பிரதி உபகாரமும் எதிர்பார்க்காது இரத்ததானம் செய்து உயிர் காக்கும் உத்தமர்களுக்கு நன்றி கூறும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

இந்த ஆண்டிற்கான தொனிப்பொருள் இரத்ததானம் செய்வது ஒற்றுமையின் செயல்.

இந்த முயற்சியில் இணைந்து உயிர் களைக் காப்பாற்றுங்கள், மேலும் தன்னார்வ குருதிக்கொடை உயிர்களைக் காப்பாற்றுவதிலும் சமூகங்களுக்குள் ஒற்றுமையை மேம்படுத்துவதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது.

கர்ப்பம் மற்றும் பிரசவத்துடன் தொடர்புடைய குருதிப்போக்கினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு திறம்பட சிகிச்சையளிப்பதற்கு குருதி மற்றும் குருதிக் கூறுகள் அத்தியாவசியமானவை. நீண்டகாலநோய்கள்மற்றும்ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக கடுமையான குருதிச் சோகையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பெண்கள், முதியோர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு குருதி அதிகளவில் தேவைப்படுகின்றது. புற்றுநோயாளர்கள் மற்றும் எலும்பு மச்சை குறைபாடுகள், ஹீமோகுளோபின் குறைவானோர் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடு நிலைகளின் பரம்பரை கோளாறுகள் கொண்ட நோயாளிகள், மருத்துவ அவசரநிலை, பேரழிவுகள் மற்றும் விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்கள், அத்துடன் அறுவை சிகிச்சை உட்பட்ட நோயாளிகளுக்கு இரத்தத்தின் தேவை இன்றியமையாதது. ஆனால் தேவையான அனைவருக்கும் பாதுகாப்பான குருதி மற்றும் பாதுகாப்பான குருதிக் கூறுகள் கிடைப்பதில்லை. ஆசியாவிலுள்ள பல நாடுகளில் பாதுகாப்பான குருதியின் பற்றாக்குறை கடுமையாக நிலவுகின்றது.

வலுவான ஒற்றுமையுடன் கூடிய சமூக, கலாச்சார சூழ்நிலையானது ஒரு பயனுள்ள இரத்ததானம் வழங்கும் திட்டத்தின் வளர்ச்சியை எளிதாக்கும். அதே வேளையில், இரத்ததானம் சமூக உறவுகளை உருவாக்குவதற்கும் ஒரு ஐக்கிய சமூகத்தை உருவாக்குவதற்கும் பங்களிப்பு செய்கின்றது என்பது பரவலாக ஏற்றுக்கெ ாள்ளப்படுகிறது.

கொரோனா என்னும் கொடிய உயிர்கொல்லி நோயால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுக்கொண்டிருந்த போதும் ஏனைய நோயாளர்களுக்கான சிகிச்சைகள் தொடர்ச்சியாக நடைபெற்றன,

இதற்கு குருதி தேவைப்பட்டது. அப்போது குருதிக்கொடையாளர்கள் அச்சமின்றி தங்கள் பணியை தொடர்ந்து செய்தார்கள். அதனால் இரத்த வங்கியின் செயற்பாடுகள் சிறப்பான முறையில் நடைபெற்றன.

நோயாளர்களுக்கு தேவையான குருதியை தட்டுப்பாடின்றி வழங்கக் கூடியதாகவிருந்தது. அதே போல் தற்போது எமதுநாட்டில்ஏற்பட்டிருக்கும்பொருளாதார பிரச்சினைக்கு மத்தியிலும் குருதிக் கொடையாளர்கள் மனம் தளராது தொடர்ச்சியாக குருதிக்கொடை செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு மகத்தான சேவையாற்றி வருகின்றார்கள். அவர்களுக்கு இந் நன்நாளில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நிலாவரையில் தொல்லியல் திணைக்கள நடவடிக்கைக்கு தடை தவிசாளர் நிரோஷை மீளவும் மன்றில் முன்னிலையாகப் பணிப்பு



நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்குத் தடைகளை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டே வழக்கு மீள முன்னெடுக்கப்பட முடியும் என கடந்த வருட ஆரம்பத்தில் பொலிஸாருக்கு நீதிமன்றமும் அறிவுறுத்தியிருந்த நிலையில் வழக்கு மீளவும் நாளை (புதன்கிழமை) மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்டவர்கள் தடைகளை ஏற்படுத்தினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த வருடம் ஏப்ரலில் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில், தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமத்துக்குத் தடை ஏற்படுத்தியதாக மேலும் சிலரை இணைக்கவுள்ளதாகவும் மன்றில் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம், தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் நிலாவரைக் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கிணற்றின் பிரதேசத்தை பிரதேச சபை தொடர்ச்சியாக அரச பெறுகைகேள்விகோரல் நடைமுறைகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கி வந்துள்ளது. அந்த இடத்திலேயே தொல்லியல்திணைக்களம்செயற்பட்டுள்ளனர். குற்றவியல் சட்டக் கோவையின் பிரகாரம் இந்த வழக்கை சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப்பத்திரத்தைப் பொலிஸார் தாக்கல் செய்திருக்கவேண்டும்.

நிலாவரையில் பிரதேச சபை பல முதலீடுகளைச் செய்துள்ளது. தொல்லியல்திணைக்களத்துக்குப்பொறுப்பான அமைச்சரே மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதிபெற்றே தொல்லியல் திணைக்களம் செயற்பட்டுள்ளது என உத்தரவாதமளித்துள்ளார். ஆனால், இங்கு பிரதேச சபை ஒன்றின் தவிசாளர் என அந்தக் கருத்தினை வலியுறுத்து கையில் அரசகருமத்துக்குத் தடை ஏற்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்படுகின்றது என கடந்த வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணையில் முன்வைத்தனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேசசபையின் தலைவர் என்றவகையில் தவிசாளார் அங்கு என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பியமையை அரசகடமைக்கு தடைஏற்படுத்தியதாகக் கருத முடியாது. நிர்வாக ரீதியாக இரு அரச நிறுவனங்களுக்கு இடையே எழும் பிரச்சினையைக் குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் அணுகமுடியாது. எனவே இந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என மன்றில் சட்டத்தரணிகள் முன்வைத்தனர்.

தனியாராக இருந்தாலென்ன அரச தாபனமாக இருந்தாலேன்ன பிரதேச சபையின் அனுமதி பெற்றே எந்தக் கட்டுமானத்தையும் செய்ய முடியும் என்பதும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

அந்த் வழக்கைக் கடந்த வருடம் விசாரித்த நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் முதலாம் எதிராளியாக மன்றில் முன்னிலையாகியுள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளரை விசாரிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதாக எங்கும் வெளிப்படுத்தவில்லை. அத்துடன் தொல்லியல் திணைக் களத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்ததுடன் தொடர்ந்து இந்த வழக்கை நடத்துவதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று வழக்கைத் தொடருமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

நீதிமன்று, பிரதேசசபைத் தவிசாளர் இந்த வழக்கில் மேலதிக விசாரணைகள் தேவைப்படின் தவிசாளர் ஒத்துழைக்க வேண்டும் எனவும் தவிசாளர் ஒரு லட்சம் ரூபா சொந்தப்பிணையில் செல்வதற்கும் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மீளவும் இந்த வழக்கிற்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரை முதலாவது சந்தேகநபராக அடையாளப்படுத்தி நாளை (புதன்கிழமை) மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து கடந்த வருடம் நிலாவரையில் சந்தேகத்துக்கிடமான முறையில் அத்திபாரம் போன்று கிடங்குகளை வெட்டிய நிலையில் அங்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்புக்களை அடுத்து பொலிஸ் நிலையத்தில் வலிகாமம் கிழக்குப்பிரதேசசபைதவிசாளர் இணக்கத்தை ஏற்படுத்துதல் என அழைக்கப்பட்டு பொலிஸ் அதிகாரிகளால் தவிசாளர் நிலாவரையில் தலையிடக்கூடாது என வலியுறுத்தப்பட்ட நிலையில் தவிசாளர் அதனை ஏற்க மறுத்திருந்தார். இந்த நிலையிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கையெழுத்து சஞ்சிகை போட்டியின் பரிசளிப்பு!

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த. (உயர்தர) 1997 மாணவர்களின் அனுசரணையில் நடத்தப்பட்ட கையெழுத்து சஞ்சிகைப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் நாளை (புதன்கிழமை) மு.ப. 11 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் அதிபர் இ. செந்தில் மாறன் தலைமையில் இடம்பெறவுள்ளது.இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

## போதைப்பொருள் பாவனைகள் இளைஞர்கள் மத்தியில் அதிகரிப்பு

இளைஞர்கள் மத்தியில் அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர்ஞானதாஸ பெரேரா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அவர்கள் தற்போது மதுபானங்களின் விலைகள் அதிகரித்து வருகின்றமை காரணமாக மதுபானங்களுக்கு மாற்றாக கஞ்சா கலந்த போதையைதூண்டும் பொருள்களைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இவற்றைக் கட்டுப்படுத்தத் தவறினால் நிலைமை மேலும் மோசமடையக் கூடும் எனவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஞானதாஸ பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாகப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலையேற்றம், அதிகரித்துள்ள சமூக மற்றும் பொருளாதார அழுத்தங்கள் மற்றும் மதுபானங்களின் விலையேற்றம் என்பன இதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மன்னாரில் அதிக விலையில் அரிசி விற்றவர்கள் மீது வழக்குத் தாக்கல்







அரசாங்கத்தால் அரிசிக்கு அதி உச்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்ட நிலையில் மன்னார் நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை மேற்கொண்ட வியாபாரிகள் மீது நேற்று (திங்கட்கிழமை) வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது அரிசியின் நிர்ணய விலையை காட்சிப்படுத்தாது, அரிசி விற்பனையில் ஈடுபட்டமை, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்தவர்கள் மற்றும் அரிசியை பதுக்கி வைத்த சில வர்த்தகர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

குறிப்பாக வெள்ளை நாடு 220 ரூபாவுக்கும் , சிவப்புபச்சை 210 ரூபாவுக்கும், சம்பா 230 ரூபாவுக்கும்,வெள்ளைப்பச்சை 220 ரூபாவுக்கும், விற்பனை செய்யும்படி அரசாங்கத்தால் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது ஒரு லட்சம் தொடக்கம் ஐந்து லட்சம் வரை அபராதமும் மொத்த வியாபார நிலையங்களுக்கு ஐந்து லட்சம் தொடக்கம் 50 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்பட்டு வருகின்றது.

இந்த விசேட ரோந்து நடவடிக்கை மன்னார் மாவட்டம் முழுவதும் விரிவுபடுத்தப்படவுள்ளதுடன் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாகப் பொருள்களை விற்பனை செய்பவர்கள் மற்றும் பொருள்களை பதுக்கி வைப்பவர்கள்மீதும்சட்டநடவடிக்கைமேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறு அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு சபையில் பொதுமக்கள் நேரடியாக முறைப்பாட்டை மேற்கொள்ள முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2022இல் வெளியிடப்பெற்றது.